மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, பல்வேறு நோய்கள் பரவுகின்றன. அதற்குப் பல்வேறு மருந்துகள் தெளிக்கப்படுகின்றது. நெப்பாண்டிக்ஸ் செரிநோப்பா என்று இருக்கின்றன. தடுக்க பாரசை என்ற தடுப்பு பூச்சிகளை விட்டுத் தடுக்கும் முறையிருக்கிறது. அதை அதிகமாக ஆராய்ச்சி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

MR. SPEAKER : Now Government Bills.

(5) நடைமுறைக் கேள்வி

ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானத்தை அவையில் எடுத்துக் கொள்வது பற்றி.

திரு. ஜே. ஜேம்ஸ் : சார், பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். ஒற்றி வைப்புத் தீர்மானம் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிக் கொடுத்திருக்கிறோம். அதை இப்பொழுது எடுத்துக் கொள்கிறீர் களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒற்றி வைப்புத் தீர்மானங்கள் நாளையதினம் எடுத்துக் கொள்ளப்படும். ஒற்றி வைப்புத் தீர்மானத் திற்காக இப்படிப்பட்ட ஒழுங்குப் பிரச்னை என்று எழுப்புவது முறை யல்ல. அதை சபாநாயகர் அறையிலேயே தள்ளிவிடலாம், இங்கேயும் தள்ளிவிடலாம், அதற்கான காரணங்களைச் சொல்லலாம். ஆனால் அதைக் கொண்டுவந்து சபையிலே எழுப்புவது முறையானது அல்ல என்பதைமட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(6) அரசினர் சட்டமுன்வடிவுகள்

(அ) 1971-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிகால நீட்டிப்பு) சட்டமுன்வடிவு

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 1971-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிகால நீட்டிப்பு) சட்டமுன்வடிவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இச் சட்டமுன்வடிவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்டமுன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன் வடிவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.